# PRIMARY SCHOOL

## SEMESTRAL ASSESSMENT 1

Name: ______________________ (    ) Class: P6 ______________

## Higher Tamil Language

**பிழைத்திருத்தம் (10 ம,பெ)**

**பின்வரும் பகுதியில் கோடிட்ட சொற்கள் பிழையானவை. அவற்றைத் திருத்திச் சரியான சொல்லைக் கீழ்க்காணும் கட்டத்தில் எழுது.**

இன்று சிங்கப்பூரில் பல பகுதிகளில் நூலகங்கள் இயங்கி வருகின்றன. இவை மாணவர்களின் அறிவு வளர்ச்சிக்குப் பெரிதும் **(Q1)** <u>துணைபுரிகின்றது.</u> இந்நூலகங்களில் சிறுவர்களும் பெரியவர்களும் படிப்பதற்கு ஏற்ற நூல்களுள், வார, மாத **(Q2)** <u>இதழ்களையும்</u> வாசிக்கக் கிடைக்கின்றன. அவை ஆங்கிலம், சீனம், மலாய், தமிழ் ஆகிய மொழிகளில் **(Q3)** <u>பிரித்த</u> வைக்கப்பட்டுள்ளன. மாணவர்கள் இந்நூலகங்களுக்குச் சென்று தாம் படிக்க விரும்பும் நூல்களை இரவல் **(Q4)** <u>பெற்றுக்கொண்டு</u> படிக்கிறார்கள். அது மட்டுமல்லாமல் ஆராய்ச்சி செய்வது, குறிப்பு எடுப்பது போன்ற நடவடிக்கைகளிலும் **(Q5)** <u>ஈடுபட்டார்கள்.</u> ஆகவே, மாணவர்கள் அடிக்கடி நூலகங்களுக்குச் செல்வதைத் தம் கடமையாகக் கொள்ள வேண்டும் இவ்வாறு செய்தால் அவர்கள் நிச்சயமாகத் தங்கள் பள்ளிப் பாடங்களில் சிறந்து விளங்குவர் என்பதில் சந்தேகமில்லை.

| | |
|---|---|
| Q1 | |
| Q2 | |
| Q3 | |
| Q4 | |
| Q5 | |

MORE PAPERS AVAILABLE @ TESTPAPERSFREE.COM

வாக்கியங்களை முடித்தெழுது (8 ம.பெ)

பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் இரு வாக்கியங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. முதல் வாக்கியத்தின் கருத்தை மாற்றாமல் இரண்டாவது வாக்கியத்தை நிறைவு செய்து எழுது.

Q6. அன்பன் தீய நண்பர்களோடு சேர்ந்து படிப்பில் கவனம் செலுத்தாமல் வழி தவறினான்.

அன்பன் படிப்பில் சிறந்து விளங்க வேண்டுமானால் ____________

____________________________________________

Q7. நமது பிரதமர் அந்த வட்டாரத்தில் சில மரங்களை நட்டார்.

அந்த வட்டாரத்தில் வளரும் மரங்கள் ____________

____________________________________________

Q8. இக்காலச் சவால்களைச் சமாளிக்க ஒருவர் கணினித் தொழில்நுட்பம் தெரிந்திருக்க வேண்டும்.

கணினிப் பற்றிய தொழில்நுட்பம் தெரியாதவர்களால் ____________

____________________________________________

Q9. மாணவர்கள் தொழிற்கல்வியை விரும்பிப் பயில்கிறார்கள்.

தொழிற்கல்வி மாணவர்களால் ____________

____________________________________________

வேற்றுமை உருபுகள் (8 ம.பெ)

பின்வரும் பகுதியில் அடைப்புக்குள் கொடுக்கப்பட்டுள்ள சொற்களுடன் பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்துக் கோடிட்ட இடங்களை நிரப்பு.

இளைஞன் ஒருவன் கோயிலுக்குச் சென்று கொண்டிருந்தான். வழியில் ஒரு பள்ளத்தாக்கின் (Q10) ______________________ (ஓரம்) ஒருவன் படுத்துறங்கிக் கொண்டிருந்தான். அந்த இடம் மிக ஆபத்தானது. அவன் சிறிது புரண்டிருந்தாலும் (Q11) ______________________ (உயரம்) விழுந்து இறந்திருப்பான். இளைஞன் (Q12) ______________________ (அவன்) விரைந்து சென்றான். மது மயக்கமே அவனின் இந்த (Q13) ______________________ (நிலை) காரணம் என்பதை இளைஞன் உணர்ந்தான். அவன் மெதுவாக அந்தக் குடிகாரனைத் தூக்கி ஒரு பாதுகாப்பான இடத்தில் படுக்க வைத்துவிட்டுக் கோயிலுக்குச் சென்றான்.

கருத்தறிதல் (8 ம. பெ)

பின்வரும் பகுதியில் **Q14** முதல் **Q17** வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற வாக்கியங்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்குரிய மிகப் பொருத்தமான வாக்கியத்தைத் தெரிவு செய்து அதன் எண்ணைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தில் எழுது.

ஒரு நாட்டின் இளவரசி வேகமாக ஓடுவதில் ஆற்றல் பெற்று விளங்கினாள். அவளை யாராலும் ஓட்டப்பந்தயத்தில் வெல்ல முடியவில்லை. Q14. ____________________. அந்நாட்டின் அரசன், ஓட்டபந்தயத்தில் இளவரசியைத் தோற்கடிப்பவன் மட்டுமே அவளைத் திருமணம் செய்துகொள்ள முடியும் என்று அறிவித்தான். Q15. ____________________. ஆனால், அனைவரும் ஓட்டப்பந்தயத்தில் இளவரசியுடன் தோற்றனர்.

இறுதியில் ஓர் இளவரசன் அவளைத் தோற்கடிக்க ஒரு திட்டம் தீட்டினான். Q16. ____________________. பின்னர் போட்டியும் ஆரம்பித்தது. இளவரசனும் இளவரசியும் ஓடத் தொடங்கினர். ஓடிக்கொண்டிருந்த இளவரசி ஓட்டப்பந்தயத்தடத்தில் தங்கக்கட்டிகளைக் கண்டாள். பேராசைக் கொண்ட அவள் தங்கக்கட்டிகளை எடுத்துத் தன் மடியில் கட்டி வைத்துக் கொண்டு ஓடினாள். தங்கக்கட்டிகளின் பாரத்தின் காரணமாக அவளால் வேகமாக ஓட முடியவில்லை. Q17. ____________________. இறுதியில் இளவரசி தங்கக் கட்டிகளின் மீதுள்ள பேராசையால் ஓட்டப்பந்தயத்தில் தோல்வி அடைந்தாள். இளவரசனோ தன் தந்திரத்தால் வெற்றி பெற்று இளவரசியை மணந்தான்.

1. அவன் ஓட்டப்பந்தயத் தடத்தில் பல தங்கக்கட்டிகளைப் பரப்பி வைத்தான்.

2. எனவே அவள் பேராசை கொண்டிருந்தாள்.

3. அறிவிப்பைக் கேட்டதும் பல நாட்டு மன்னர்கள் இளவரசியுடன் ஓட்டப்பந்தயத்தில் போட்டியிட முன்வந்தனர்.

4. ஆனாலும் அவளது முயற்சி வீண் போகவில்லை.

5. ஆனால், இளவரசனோ மிகவும் விரைவாக ஓடி ஓட்டப்பந்தயத்தில் வென்றான்.

6. அவன் போட்டிக்கு முன் இளவரசிக்குத் தங்கக்கட்டிகளைப் பரிசாகக் கொடுக்க எண்ணினான்.

7. அந்த அறிவிப்பைக் கேட்ட பல நாட்டு மன்னர்கள் இளவரசியுடன் போட்டியிட தயங்கினர்.

8. அதனால், அவள் கர்வம் கொண்டிருந்தாள்.

| வினா எண் | விடை |
|---|---|
| Q14 | |
| Q15 | |
| Q16 | |
| Q17 | |

**சுயவிடைக் கருத்தறிதல் (26 மதிப்பெண்கள்)**

**பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியில் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுது.**

ஓடி விளையாடும் சிறுவர்களுக்கும் ஓய்வு பெற்ற பெரியவர்களுக்கும் இடையில் உள்ள வேறுபாடு, வளர்ச்சியில்தான் உள்ளது. பெரியவர்கள் வளர்ந்துவிட்டார்கள், இனி மேற்கொண்டும் வளர்ச்சி பெற முடியாதவர்கள். ஆனால், சிறுவர்கள் வளர்பவர்கள்.

வளர்ந்துவிட்ட ஒன்றுக்குச் **செலுத்தும்** அக்கறையைவிட வளரும் ஒன்றுக்குத்தான் அதிக அக்கறை செலுத்த வேண்டியிருக்கிறது. ஒரு மரம் செடியாக இருக்கும்போது, அதனை எவ்வளவு அக்கறையுடன் வளர்க்கிறார்கள். அதற்குத் தினமும் நீர் ஊற்றுகிறார்கள், மண்ணை நன்கு கிளறி விடுகிறார்கள்; எரு இடுகிறார்கள்; ஆடு மாடுகள் கடித்துவிடாதவாறு வேலி போடுகிறார்கள். இவையெல்லாம் இல்லையெனில் செடிகள் பெரும்பாலும் நல்ல மரங்களாகவும் பயன்தரும் மரங்களாகவும் திகழ்வதில்லை.

சிறுவர்களும் இத்தகையவர்களே. அவர்களுக்கு நல்ல உணவளித்து, ஒழுக்கங்களைக் கற்பித்து நல்லறிவு பெறச் செய்ய வேண்டும். இவற்றையெல்லாம் அக்கறையுடன் கவனித்துச் செய்யாவிட்டாலும் சிறுவர்கள் மனிதர்கள் ஆவார்கள். ஆனால், நல்ல குடிமக்களாகவும் வருங்கால உலகை வாழ்விக்கும் சான்றோர்களாகவும் திகழ மாட்டார்கள்.

இளமையில் கற்பது எளிதில் மனதில் பதியும். பெரியவர்களான பிறகும் மறக்காமல இருப்பவை இளமையில் கற்பவையே. இதனால்தான், 'இளமையில் கல்' என்று புலவர்கள் கூறிச் சென்றனர். கற்றல் என்பது வெறும் எழுத்தறிவை மட்டும் குறிக்கவில்லை. அது நற்பண்பினையும் குறிக்கிறது. படிப்பையும் பண்பையும் இளமையில் பெறவில்லையேல் வாழ்க்கை பயனற்றதாய் போய்விடும்.

நற்குணங்களையும் வீரத்தையும் இளமையில் சிறுவர்களுக்கு எளிதாகக் கற்றுத் தருவது ஒன்று உண்டு. அதுதான சிறந்த சிறுவர இலக்கியம். பெரிய இலக்கியங்களை எல்லாம் பிற்காலத்தில் குழந்தைகள் கற்று **களிப்படைய** வேண்டுமானால் அவர்கள் சிறுவர் இலக்கியத்தைப் படித்துப் பயனடையப் பழகிக்கொள்ள வேண்டும். சுருங்கக் கூறின், இலக்கியங்கள் அனைத்திற்கும் அடிப்படையானது சிறுவர் இலக்கியம் ஆகும். சிறுவர் இலக்கியத்தைப் புறக்கணித்தால் வருங்காலத்தில் பிற இலக்கியங்களும் புறக்கணிக்கப்படும்.

இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள். வருங்காலச் சமுதாயத்தை உருவாக்கும் தன்மை பெற்றவர்கள். நாடு காக்கும் நாளைய தலைவர்கள் நற்பண்புகளைப் பெற்றிருக்க வேண்டுமானால் இன்றைய சிறார்கள் மனம் பண்பட வேண்டும். அதைச் செய்ய வல்லது சிறுவர் இலக்கியம்.

"சொர்கலோகத்தின் திறவுகோல் சிறுவர்களே", என்று புலவர்கள் கூறுகின்றனர். அந்தத் திறவுகோலைச் செம்மையாக வைத்திருப்பது, பழுதடையாமல் பாதுகாப்பது சிறுவர் இலக்கியமே. எந்நாட்டில் இலக்கியம் வளர்ந்துள்ளதோ அந்நாட்டில் மிகச் சிறந்த சமுதாயம் உருவாகும் என்பதில் ஐயம் இல்லை.

<u>வினாக்கள்</u>

Q18. சிறுவர்கள் பெரியவர்களிடமிருந்து எவ்வாறு வேறுபடுகிறார்கள்? (4)

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

Q19. செடிகள் பயந்தரும் நல்ல மரங்களாகத் திகழ நாம் என்ன செய்ய வேண்டும்? (4)

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

Q20. சிறுவர்கள் நல்ல குடிமக்களாகத் திகழ எவை தேவைப்படுகின்றன? (4)

Q21. ஒருவர் தம்முடைய வாழ்க்கை பயனுடையதாக அமைய என்ன செய்ய வேண்டும்?(4)

Q22. சிறுவர்கள் இளம் வயதிலேயே சிறுவர் இலக்கியத்தைப் படிப்பதன் அவசியம் என்ன? (4)

Q23. ஏன் ஒரு நாட்டிற்கு இலக்கியம் முக்கியமானது? (2)

Q24. <u>பொருள் எழுது</u> (4 மதிப்பெண்கள்)

பின்வரும் சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றுள்ளன. அவற்றின் பொருளை உணர்த்தும் வேறொரு சொல்லைக் கோட்டில் எழுது.

அ. செலுத்தும் - ______________________________ (2)

ஆ. களிப்படைய - ______________________________ (2)

# P6 HMT
# TESTPAPER 12

<u>இன்று சிங்கப்பூரில்..........</u>

1. துணைபுரிகின்றன 2. இதழ்களும் 3. பிரித்து 4. பெற்று
5. ஈடுபடுகிறார்கள்

6. அவன் தீய நண்பர்களோடு சேராமல் படிப்பில் கவனம் செலுத்த வேண்டும்.

7. அந்த வட்டாரத்தில் வளரும் மரங்கள் நமது பிரதமரால் நடப்பட்டவை.

8. இக்காலச் சவால்களைச் சமாளிக்க முடியாது.

9. விரும்பிப் பயிலப்படுகிறது.

10. ஓரத்தில் 11. உயரத்திலிருந்து 12. அவனிடம் 13. நிலைக்கு

14. 8 15. 3 16. 1 17. 5

18. சிறுவர்கள் வளர்பவர்கள்; அவர்கள் இன்னும் வளரக்கூடியவர்கள். ஆனால் பெரியவர்கள் வளர்ந்துவிட்டார்கள். அவர்கள் இன்னும் வளர்ச்சி பெற முடியாது. இவ்வாறு சிறுவர்கள் பெரியவர்களிடமிருந்து வேறுபடுகிறார்கள்.

19. செடிகள் பயன்தரும் நல்ல மரங்களாகத் திகழ நாம் அந்தச் செடிகளுக்கு தினமும் நீர் ஊற்றி, மண்ணை நன்கு கிளறி, எரு இட்டு, ஆடு, மாடுகள் அவற்றைக் கடித்து விடாதபடி வேலி இட்டு அக்கறையுடன் கவனித்துக் கொள்ள வேண்டும்.

20. சிறுவர்கள் நல்ல குடிமக்களாகத் திகழ நல்ல உணவும், நல்லறிவும், ஒழுக்கங்களும் தேவைப்படுகின்றன.

21. ஒருவர் தம்முடைய வாழ்க்கைப் பயனுடையதாக அமைய படிப்பையும் நற்பண்பையும் இளமையிலேயே பெற வேண்டும்.

22. பிற்காலத்தில் பெரிய இலக்கியங்களை எல்லாம் கற்றுக் களிப்படைய வேண்டுமானால் சிறுவர்கள் இளம் வயதிலேயே சிறுவர் இலக்கியத்தைப் படிப்பது அவசியம் ஆகும்.

23. எந்நாட்டில் இலக்கியம் வளர்ந்துள்ளதோ அந்நாட்டில் மிகச் சிறந்த சமுதாயத்தை உருவாக்கும் ஆற்றல் பெற்றாது இலக்கியம் என்பதால் ஒரு நாட்டிற்கு இலக்கியம் முக்கியமானது.

Q24. சொற்பொருள் (4 மதிப்பெண்கள்)

அ. கொடுக்கும்
ஆ. மகிழ